(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குறுகிய கால வினா. வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

விடுதி

***7433—திரு. இரா. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, பெரம்பலூரில் ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மிகவும் பின்தங்கிய மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டத்தில் நம்பம்பட்டி என்னும் ஒரு குக்கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு, 1972 முதல் கிளைக் கழகச் செயலாளராகவும், 2009 முதல் நம்பம்பட்டி ஊராட்சிக் கழகச் செயலாளராகவும் பணியாற்றிட வாய்ப்பு வழங்கிய எங்கள் அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) 2006 இல் கொளத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், மீண்டும் 2011 இல் கந்தர்வக்கோட்டை தொகுதி வேட்பாளராகவும் போட்டியிட எனக்கு வாய்ப்பு வழங்கியதோடு, எனது வெற்றிக்காக வெயில் என்றும் பாராமல், கந்தர்வக்கோட்டைக்கு வந்து தேர்தல் பிரச்சாரம் செய்து, என்னை வெற்றிபெறச் செய்ததோடு மட்டுமல்லாமல், நான் கனவிலும் நினைத்துப் பார்த்திராதவகையில் எனக்கு முகவரி தந்து, அமைச்சராக்கி உலகறியச் செய்த, நாங்கள் நாள் பொழுதும் வணங்கும் எங்கள் குல தெய்வமே, (மேசையைத் தட்டும் ஒலி) தாயே, எனது கோடானுகோடி நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் எத்தனை பிறவி*

2011 ஆகஸ்ட் 30]

எடுத்தாலும், நானும் எனது குடும்பமும், எனது சந்ததியினரும் என்றென்றும் விசுவாசமிக்க நன்றிக் கடன்பட்டவர்களாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இருப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தொகுதி, பெரம்பலூரில் ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி கட்ட செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. இரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகம் என்ற ஆலயத்தின் ஆராதனைக்குரிய தெய்வமாய், திராவிடக் கப்பலுக்குத் திசைகாட்டும் கலங்கரை விளக்காய், விந்தியத்திற்குத் தெற்கே வீசும் சந்தனக் காற்றாய், படித்தவரும், பாமரரும் கைகூப்பித் தொழுகின்ற கன்னித் தமிழ்வடிவாய், புத்தனுக்குப் பின்னர் இவ்வுலகு கண்ட பேரொளியாய், அகிலமே போற்றும்வண்ணம் அழகான ஆட்சியை நடத்திடும் அதிசயமே அசந்துபோகும் எங்கள் அதிசயமே! இதய தெய்வமே! எங்கள் அம்மாவே! மற்றவர்கள் எல்லாம் சும்மாவே! கறுத்துப் போகாத எங்கள் தங்கமே! கருணாநிதியை ஒழித்துக் கட்டிய சிங்கமே! வரம் தரும் அன்னையே! தாழ்பணிந்து வணங்குகிறேன் உம்மையே! (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–55

என்ன தவம் செய்தேன் தாயே! தங்களின் தொண்டனாய்ப் பிறப்பதற்கு. 22–8–2010 அன்று தங்களின் திருக்கரங்களினால் மங்கல நாண் எடுத்துத் தந்து, என் வாழ்க்கையில் அகல் விளக்கு ஏற்றிவைத்தபோது அடைந்தேன் அம்மா பிறவிப் பயன். தங்கள் பாதம்பட்ட இடம் பசுஞ்சோலையாகிறது, தங்கள் பார்வைபட்ட இடம் வான்மழை பொழிகிறது, தங்களின் பிறந்த நாள் எங்களுக்குத் தேசியத் திருநாள்.

‘கனி’ உனக்கு, 1 இலட்சத்து 80 ஆயிரம் கோடி ஸ்பெக்ட்ரம் ‘மணி’ எனக்கு என ஆண்டிமுத்து ராசாவிடம் கூவி விற்ற

கோமாளித் தலைவர்கள் மத்தியில், நாட்டைக் காட்டிக் கொடுத்தாலும் பரவாயில்லை, என் சின்ன குடும்பத்திற்கு சில ஆயிரம் கூட்டிக் கொடுத்தால் போதும் எனக் கூறிடும் குள்ள நரிகள் மத்தியில், கழகமே கோயில்! அம்மாவே என் தெய்வம் என நாளும் உழைத்திட்ட காரணத்தினால் மாண்புமிகு அம்மா பேரவை ஒன்றிய துணைச் செயலாளராக, பெரம்பலூர் மாவட்ட கழகப் பிரதிநிதியாக, அரியலூர்–பெரம்பலூர் ஒருங்கிணைந்த மாவட்டத்தின் மாணவரணிச் செயலாளராக அம்மாவின் கருணையோடு 12 ஆண்டுக்காலம் பணியாற்றுகின்ற வாய்ப்பைத் தந்த காரணத்தினால், அம்மாவே ஜெயம்! தி.மு.க.காரர்களை எதிர்ப்பதில் துளியும் இல்லை என் மனதில் பயம் என பெரம்பலூர் மாவட்டத்தில் பணியாற்றிவந்த இந்தப் பரம ஏழையை பெரம்பலூர் தனித் தொகுதி சட்டமன்ற வேட்பாளராக்கி, கொள்ளையடித்து வைக்கப்பட்ட 1 இலட்சத்து 80 ஆயிரம் கோடி பணத்தில் ஆண்டிமுத்து ராசாவால் வாரி இறைத்தபோதும் ஒருசில கோடிகளைக் கொட்டிக் கொடுத்தபோதும் 2ஜி, 3ஜி, ச்சி, ச்சி என தி.மு.க.காரர்களையும் ஆண்டிமுத்து ராசாவையும் காரி உமிழ்ந்து அதல பாதாளத்தில் கீழே தள்ளி, அம்மாவின் அருட்பார்வையால், கருணையால், கடாட்சத்தால் 20 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அம்மாவின் உண்மைத் தொண்டனை வெற்றிபெறச் செய்ய பெரம்பலூருக்கு வருகைத் தந்து, பிரச்சாரம் செய்து, இந்தச் சாதாரணத் தொண்டனை வெற்றிபெறச் செய்த தாயே! உங்களுக்குக் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, காருள்ளவரை, கடல் நீருள்ளவரை இந்த மண்ணுள்ளவரை, அந்த விண்ணுள்ளவரை நானும் என் குடும்பமும் உங்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம் தாயே! எனச் சொல்லி பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில், பெரம்பலூர் நகரில் நான்கு தனியார் கல்லூரிகளும், ஒரு பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரியும் அமைந்து, ஏறத்தாழ 8 ஆயிரம் மாணவர்கள் பயில்கின்றார்கள். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்கள் 4,500 பேர் பயில்கின்றனர். அவர்களுக்கென்று அரசுக் கல்லூரி மாணவர் விடுதியை அமைத்துத் தந்தால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அந்த மாணவச் சமுதாயத்தினர் என்றுமே நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2011 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில் ஓர் அரசுக் கலைக் கல்லூரியும், 4 தனியார் கலைக் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. அரசுக் கல்லூரியில் 650 ஆதி திராவிட மாணவர்களும், 300 ஆதி திராவிட மாணவிகளும் பயின்று வருகிறார்கள். ஏற்கெனவே, பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூரில் ஒரே கட்டடத்தில் கீழ்தளத்தில் ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவியர் விடுதியும், முதல் தளத்தில் கல்லூரி மாணவியர் விடுதியும் செயல்பட்டு வருகின்றன. கீழ்தளத்தில் செயல்படும் மகளிர் விடுதியில் 170 மாணவியர் தங்கிப் பயில இடவசதியுள்ளது. ஆனால், தற்போது, 134 மாணவியர் மட்டுமே தங்கிப் பயின்று வருகிறார்கள். மகளிர் விடுதியைப் பொறுத்தவரையில் 80 மாணவியர் தங்கிப் பயில இடவசதியுள்ளது. 80 மாணவியரும் தற்போது தங்கிப் பயின்று வருகின்றார்கள். பெரம்பலூர் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி தற்போது இல்லாததைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று புதிய ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்படுமென்பதைப் பேரவை வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம்மூலம் குறைந்த கட்டணத்தில் ஒளிபரப்புச் சேவைகளைத் தொடங்குதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*